ஞர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையிலிருந்து வந்த விமானம் தாமதமாக வந்ததினாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ தமிழறிஞர்கள் உரித்த காலத்தில் மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள இயலாது போயிற்று. இனி என்ன செய்வது ? தமிழிலக்கியத்தைப்பற்றி யாராவது பேச வேண்டுமே? கடைசி நிமிடத்தில் வானொலி நிலையத்தினருக்கு டாக்டர் கிருஷ்ணனுடைய ஞாபகம் வந்தது. விவாத அரங்கில் சொற்பொழிவாற்றும்படி அவரை வேண்டிக் கொண்டனர். தயாரிப்பு செய்வதற்கு அவகாசமே இல்லை. எனினும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார் கிருஷ்ணன். அவருடைய பேச்சு அன்று அனைத்திற்கும் மகுடமிட்டாற்போல அமைந்தது. தீந்தமிழில் இலக்கிய விருந்தே அளித்து விட்டார் கிருஷ்ணன். அவருடைய இலக்கிய ஞானத்தைக் கண்டு அனைவரும் பிரமித்துவிட்டார்கள். டாக்டருடைய தமிழ்ப் புலமைக்கு இது மிகச் சிறந்த சான்றாகும். ‘‘பூமியின் வயதென்ன ?’’, சூரிய சக்தி ’’, ‘‘நான் சந்தித்த மாபெரும் விஞ்ஞானிகள்’’, ‘‘டாக்டர் எஸ். சந்திர சேகரின் பணிகள்’’ போன்ற விஞ்ஞான விஷயங்களைப்பற்றி எளிய தமிழில் அவர் கட்டுரைகள் எழுதியிருப்பதையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

உலகப் பிரசித்தி பெற்ற பேரறிஞராயிருந்தும் இவரிடம் செருக்கென்பதே எள்ளளவும் இல்லை. இவருடைய தகைமை, தன்னடக்கம், அன்பு, யாருடனும் சரளமாகப் பழகும் பண்பு முதலியன அனைவரின் இதயங்களையும் ஆகர்ஷித்து விடுகின்றன.

உலக விஞ்ஞானப் பேரரங்கில் உன்னதப் புகழ் பெற்ற டாக்டர் கிருஷ்ணனுக்கு அறுபதாம் ஆண்டு நிறைந்து விட்டது. இந்திய அரசாங்கம் அவருக்கு தேசியப் பேராசிரியர் என்ற பட்டமளித்து கௌரவித்திருக்கிறது. தமிழகத்தின் தவப் புதல்வருக்குத் தலைநகரில் டிசம்பர் 14ம் தேதியன்று மணிவிழா நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

அறுபதாண்டுகள் நிரம்பிய இளைஞர் கிருஷ்ணன் பல்லாண்டுகள் புகழுடன் வாழ்ந்து தாயகத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்துகிறோம்.

# சோவியத் விஞ்ஞானத்திற்கு டாக்டர் கிருஷ்ணன் புகழ்மாலை

**(டாக்டர் கிருஷ்ணன் நம் நிருபருக்கு அளித்த பேட்டி விவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்)**

இந்திய விஞ்ஞான மேதைகளில் ஒருவரான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனைப் பேட்டி காணும் பெரும்பேறு அண்மையில் எனக்குக் கிட்டியது. சற்று நேரம் அளவளாவிய பின்னர் ‘‘சோவியத் விஞ்ஞானத்தைப்பற்றித் தங்கள் கருத்து யாது ?’’ என்று வினவினேன்.

‘‘விஞ்ஞானத் துறையில் சோவியத் யூனியன் மிகவும் முன்னேறியிருக்கிறது’’ என்றார் டாக்டர் கிருஷ்ணன். ‘‘புரட்சிக்கு முன்னரும் ரஷ்யாவில் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகள் பலர் இருந்தார்கள். புரட்சிக்குப் பின்னர் கடந்த நாற்பதாண்டுகளில் விஞ்ஞானத்தின் ஒவ்வொரு பிரிவிலும் சோவியத் நாடு கண்டிருக்கும் முன்னேற்றம் வியக்கத்தக்கது.

‘‘நவநவீனமான கருவிகளைக் கொண்ட ஆய்வுக் கூடங்கள் சோவியத் யூனியனில் இருக்கின்றன. இவற்றில் ஆய்வுப் பணிபுரிய விஞ்ஞானிகளுக்கு சகல வாய்ப்புகளும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞானிகளை சோவியத் அரசாங்கம் கௌரவித்துப் போற்றுகிறது. சோவியத் யூனியனில் சர்க்கார் அதிபர்களைக் காட்டிலுங்கூட அதிகமாக சம்பளம் வாங்குபவர்கள் விஞ்ஞானிகள்தான்.’’

‘‘சோவியத் யூனியனில் சுதந்திரமாக சிந்திக்கும் உரிமை இல்லாததால் தனி விஞ்ஞானத் துறையில் (Pure Science) அந்த நாடு முன்னேறவில்லை; பிரயோக விஞ்ஞானத் துறையில் மட்டும்தான் (Applied Science) முன்னேறியிருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். இதைப்பற்றி தங்கள் கருத்து யாது ?’’ என்று அடுத்தபடியாகக் கேட்டேன்.

‘‘இவ்வாறு கூறுவது சரியல்ல. மேற்கு நாடுகளில் விஞ்ஞானிகள் எப்படி இருக்கிறார்களோ அதைப்போலத்தான் சோவியத் நாட்டிலும் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். தனி விஞ்ஞானத் துறையில் சோவியத் அறிஞர்கள் தீவிர ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். தனி பௌதீக விஞ்ஞானிகள், தனி கணித விஞ்ஞானிகள் போன்றோர் சோவியத் நாட்டில் ஏராளமாய் இருக்கிறார்கள். தனி விஞ்ஞானத் துறையில் முன்னேற்றம் காணாமல் பிரயோக விஞ்ஞானத்தில் மட்டும் முன்னேற்றம் காண்பது சாத்தியமல்ல. மூன்று சோவியத் பௌதீக விஞ்ஞானிகளுக்கு அண்மையில் நோபிள் பரிசு அளிக்கப்பட்டிருப்பதானது, தனி விஞ்ஞானத் துறையில் சோவியத் யூனியன் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது எனலாம்’’ என்று டாக்டர் கிருஷ்ணன் பதிலுரைத்தார்.

இந்திய சோவியத் விஞ்ஞானிகளுக்கிடையே, சகல நாட்டு விஞ்ஞானிகளுக்கிடையேயும், நெருங்கிய ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று டாக்டர் கிருஷ்ணன் குறிப்பிட்டார். அப்பொழுதுதான் விஞ்ஞானம் வெகு வேகமாக வளர்ந்து மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்று கருதுகிறார்.

‘‘அழிவு வேலைகளுக்கு விஞ்ஞானம் பயன்படுத்தப்படுவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?’’ என்று அடுத்தபடியாக வினவினேன்.

‘‘மனித குலத்தைப் பீடித்திருக்கும் மிகப் பெரிய துரதிர்ஷ்டம் இது’’ என்று அவர் வருந்தினார். ‘‘அணு சக்தியை அழிவு வேலைகளில் ஈடுபடுத்தாமல் ஆக்கப் பணிகளுக்குத்தான் பயன்படுத்த வேண்டும். அணு ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டும். அவற்றின் சோதனைகளை நிறுத்த வேண்டும். மனித குலம் தழைக்க வேண்டுமெனில் இது ஒன்றுதான் வழி.’’

சற்று நேரம் மௌனம் நிலவியது. மனித இனத்தின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் அவருடைய முகத்திரையில் நிழலாடின. . . ‘‘காந்தி நெறியில் செல்லும் இந்தியா அணு சக்தியை ஒருக்காலும் கொலைத் தொழிலுக்குப் பயன்படுத்தாது; விஞ்ஞானத்தை நாம் மனிதனுடைய சேவைக்கே அர்ப்பணிப்போம்’’ என்று ஆணித்தரமாகக் கூறினார்.

**‘‘பாரத நாட்டின் பௌதிகக் கலையைச்**
**சீரிதின் இயக்கும் திறலோய் பஞ்ச**
**சீலக் கொள்கை சிதையா வண்ணம்**
**ஞாலத் துள்ளோர் நலம்பெற் றுய்ய**
**ஆக்க நெறிக்கே அதைநடத் துவை நீ’’**

என்று தமிழ்க் கவிஞரொருவர் நம் விஞ்ஞான மேதையை வாழ்த்திப் பாடிய பாடல் என் நினைவுக்கு வந்தது.

# SCIENTIST WITH HUMAN TOUCH

## Mr. Nehru's Tribute To Dr. Krishnan

**By A Staff Reporter**

The most important problem to-day, according to Mr. Nehru, is how to combine the ever-increasing knowledge of science with "other things which go to make a good, whole and integrated man."

We saw "some such person in Dr. K. S. Krishnan, a lovable human being who, in spite of his tremendous learning" had not lost the common touch of humanity.

Mr. Nehru paid this tribute to Dr. Krishnan while inaugurating the scientist's sixtieth birthday celebrations at Vigyan Bhavan, New

**More local news on page 9**

Delhi, on Sunday. The function was organised by Dr. Krishnan's 60th Birthday Celebrations Committee.

The Prime Minister referred to the vast development taking place in all fields, especially scientific, and man's inability to catch up with them. He thought man was not grown-up enough yet. He should develop not only intellectually but in other respects as well, Mr. Nehru added.

In his tribute, Pandit Pant, the Home Minister who presided said that men like Dr. Krishnan not only contributed to the store of knowledge but also enhanced the status of their country.

### HUMILITY & HUMANITY

He said Dr. Krishnan retained the simplicity of the soul and the humility and humanity characteristic of culture and in him we saw "the integration of science and philosophy."

Others who felicitated Dr. Krishnan included Mr. Ananthasayanam Ayyangar, the Speaker of the Lok Sabha, Dr. K. L. Shrimali, Education Minister, and Dr. V. K. R. V. Rao, Vice-Chancellor of Delhi University.

Earlier a golden shawl and a birthday souvenir, being a collection of scientific articles in Tamil and English, were presented to Dr. Krishnan.

In his reply, Dr. Krishnan spoke of the infinite expansion of scientific knowledge and said if he had to live for another sixty years—as one of the speakers had wished—he would spend the time learning.

# K. S. Krishnan Felicitated

## PM, PANT PAY TRIBUTES

BY A STAFF CORRESPONDENT

In an age whose problem was correlation between science and humanity, Dr K. S. Krishnan was an integrated personality, Mr Nehru said at a celebration of the 60th birthday of the Director of the National Physical Laboratory.

The Vigyan Bhavan auditorium was packed on Sunday when the Prime Minister, the Home Minister and the Speaker of the Lok Sabha participated in the birthday celebrations organized by a committee headed by Dr K. L. Shrimali.

Dr Krishnan received a richly decorated golden shawl from the Dharmapuram Adinam in South India. The Central Council of Sanskrit Education, Hyderabad, also presented him a shawl.

Mr Nehru said that Dr Krishnan was something more than a scientist. That was why people loved him. One of the basic problems of the day was how to co-ordinate science and certain other vital aspects of life. Not a day passed without some new development in science and technology, to understand whose significance the human mind was not yet wholly capable.

Pandit Pant, who presided over the celebrations, said that in Dr Krishnan one saw a synthesis of science and philosophy. He was a scientist who was conscious of the limitations of science. He combined the ancient wisdom of India and the virile dynamism of the new world, retaining the inimitable cultural qualities of humility and humanity.

# கலைக்கதிர்




டிசம்பர் '58

### மணிவிழாக் கொள்ளும்

# தமிழ் விஞ்ஞானி

உலகைச் செம்மைப்படுத்தி, அதனை நாம் இன்று காணும் எழில் மலிந்த பொருளாக உருவாக்குவதற்கு உழைத்த பெரியோர்கள் பலர். அவர்களில் அறிவியல் துறையில் சிறந்த புலமைபெற்று உலகம் போற்ற வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே. அந்தச் சிலருள் ஒருவரே நமது தமிழகம் தந்த தனிப் பெரும் விஞ்ஞானி டாக்டர் கே.எஸ். கிருஷ்ணன். அறிவியலில் சிறந்து விளங்கும் அன்னாரது ஊர் வத்திராயிப்பு (வற்றாயிருப்பு) என்ற சிற்றூராகும். அதுஇராமநாதபுரம் மாவட்டத்திலுள்ளது. சிற்றூரிலும் பெரு நகராகிய மதுரையிலும் கல்வி கற்றார். அறிவொளிச் சுடர்விட்ட அவருள்ளம் ஏட்டுக் கல்வியோடுமட்டும் நின்றுவிடாமல் ஆராய்ச்சித் துறையில் சென்றது. கல்கத்தா, டாக்காபோன்ற பல்கலைக் கழகங்களில் தொடர்புகொண்டு ஆராய்ச்சிகள் செய்தார். சர். சி. வி. ராமனுடன் பழகிய காலத்தில் அவருடைய 'ராமன் விளைவு' பற்றிய ஆராய்ச்சியிலும் பங்குகொண்டார். உலகிலேயே அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்த புலமை பெற்றிருக்கும் ஒரு சிலருக்கு அளிக்கும் F. R. S. (Fellow of Royal Society-மன்னர் கழக உறுப்பினர்) பட்டமும் இவருக்குக் கொடுக்கப்பட்டது.



விஞ்ஞானத்தை ஆங்கிலத்தில்தான் பயில முடியும் என்ற எண்ணத்திற்கு இவர் உடன்பட்டவரல்லர். அழகு தமிழில் எளிய முறையில் அறிவு மணங் கமழ அறிவியல் கருத்துக்களைக் "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழி"யும் ஆற்றலுடையவர். இவ்வாறு அறிவியலில் சிறந்து விளங்கும் அன்னாருக்கு இந்த டிசம்பர்த் திங்கள் 4-ஆம் நாளன்று அறுபதாம் ஆண்டு முடிகிறது. அதையொட்டித் தில்லித் தமிழ்ச் சங்கம் மணிவிழா ஒன்று கொண்டாடப்போகிறது. இந் நன்னாளில் தமிழ் மக்கள் சார்பில் 'வாழிய கிருஷ்ணன்! வாழ்க நீடூழி!' என வாழ்த்துவோமாக.



Mr. Nehru greeting Dr. K. S. Krishnan, the well-known scientist, on his 60th birthday which was celebrated at a function in Delhi on Tuesday.

"The Hindu" 9 11/12/58



## அறுபதாண்டு நிறைவு விழா

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி வைபவம் புது தில்லியில் அவரது இல்லத்தில் டிசம்பர் 3-ந் தேதி அதிவிமரிசையாக நடந்தேறியது. டாக்டர் கிருஷ்ணன் அவர்களின் நண்பர்களும், உறவினர்களும் இவ்வைபவத்துக்கு வந்திருந்து கிருஷ்ணன் தம்பதிகளை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

இந்திய விஞ்ஞானிகளில் தலைசிறந்து விளங்குபவரும். உலக விஞ்ஞானிகளின் பெருமதிப்பைப் பெற்றவரும், இந்தியப் பௌதிகப் பேராசிரியராக இந்திய சர்க்காரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவரும், தமிழ் வளர்ச்சியிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவருமான விஞ்ஞானி கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்திருந்து பாரதத்துக்குச் சேவைபுரிய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


"Kalki" 9 14-12-58

# டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

ராமனும் கிருஷ்ணனும் பாரதத்தின் பண்டையப் பெருமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் பெயர்கள்.

இன்று விஞ்ஞானத் துறையிலும் பாரதத்தின் பெருமை ஓங்கி நிற்பது ராமனாலும், கிருஷ்ணனாலும்தான்.

விஞ்ஞான மேதை சர் சி. வி. ராமன் பௌதிகத் துறையில் ஒரு மாபெரும் ஆராய்ச்சியைச் செய்து, அரியதோர் உண்மையை வெளிப்படுத்தினார். அந்த ஆராய்ச்சியைக் கண்டு உலகம் பிரமித்தது. ஒரு கறுப்பு மனிதரா இதைக் கண்டு பிடித்தார் என்று வியந்தது. பிறகு அவரது ஒளியில் உணர்வு பெற்று, உலகில் சிறந்த நோபல் பரிசையும் அவருக்கு அளித்தது. அந்த மாபெரும் ஆராய்ச்சியில் ராமனுக்கு உறு துணையாக நின்று உதவியவர் டாக்டர் கிருஷ்ணன்.



டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் பௌதிகத் துறையில் ஓர் பெரிய மேதை. நமது நாட்டின் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கெல்லாம் கேந்திரமாக இன்று விளங்கும் தேசிய பௌதிக ஆராய்ச்சி சாலையின் தலைவராக டில்லியில் பணியாற்றி வருகிறார். நாட்டிற்காக எண்ணற்ற இளம் விஞ்ஞான நிபுணர்களை உண்டாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் பெற்றுள்ள மேல்நாட்டு விருதுகளையும், கௌரவப் பட்டங்களையும் பார்த்தாலே அவர் உலகில் எவ்வளவு பெரிய ஸ்தானத்தை வகிக்கிறார் என்பது புலனாகும்.

1946 லேயே அவருக்குப் பிரிட்டிஷ் சர்க்காரால் 'சர்' பட்டம் அளிக்கப்பட்டது. பிரிட்டனிலுள்ள பல சர்வகலாசாலைகளும், நம் நாட்டு சர்வ கலாசாலைகளும் அவருக்கு ஏராளமான கௌரவப் பட்டங்களை வழங்கியுள்ளன.

இதைத் தவிர அவர் கௌரவ அங்கத்தினராக இல்லாத விஞ்ஞான ஸ்தாபனங்களே உலகில் இல்லை எனலாம்.

இவ்வளவு தூரம் விஞ்ஞானத் துறையில் ஈடுபட்டிருந்தும், டாக்டர் கிருஷ்ணன், இன்றும் குழந்தை உள்ளத்துடன் இருந்து வருகிறார். இலக்கியத்திலும், கவிதையிலும், பாட்டிலும், பாசுரங்களிலும் உள்ளத்தைப் பறி கொடுக்கிறார். தாய் மொழியில் அளவிலாப் பற்று, நிறைந்த தெய்வ பக்தி இவைகளுடன் அந்த நிறை குடம் விளங்குகின்றது.

தமிழ்ப் பண்பும், தமிழ்க் கலையும் அவர் உள்ளத்திலும் உடலிலும் அவ்வளவு தூரம் ஊறி இருக்கிறது.

டாக்டர் கிருஷ்ணன் அவர்களுடைய சாதனைகளைப் பார்த்தால், அவருக்கு வயது அறுபதுதான் ஆகிறது என்று யாரும் நம்பவே மாட்டார்கள்.

இலக்கியத்தில் அவருக்கு உள்ள துடிப்பையும் அக்கறையையும்கண்டவர்கள், அவருக்கு அறுபது வயதாகி விட்டது என்றால் நம்ப மாட்டார்கள்.

இந்த மாதம் 3ந் தேதிஅவருடைய60-வது பிறந்த தினம், வைதீக முறையில் டில்லியில் அவர் இல்லத்தில் கொண்டாடப் பட்டது.

தமிழ் நாட்டிற்கும் பாரதத்துக்கும் தனிப் பெருமையைத் தேடித் தந்துள்ள இந்தத் தமிழ் மகனைக் கௌரவிக்க வேண்டுமென்று டில்லியில் வாழும் தென்னிந்தியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

அதற்காக இந்த மாதம் 14ந் தேதியன்று, அவர் 60-வது பிறந்த தின விழாவை ஒரு பொது விழாவாக, மிகச் சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் நீடூழி வாழ்ந்து, தம் பாரத நாட்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்க, எல்லாம் வல்ல இறைவனைப் பாரத மக்கள் எல்லோரும் பிரார்த்திக்கிறார்கள்.



"Anamda Vikatan" 9 14-12-58

## "A GREAT SCIENTIST AND SCHOLAR"

### NEHRU'S TRIBUTE TO DR. KRISHNAN

NEW DELHI, Dec. 9.

Prime Minister Nehru offered felicitations to the eminent scientist, Dr. K. S. Krishnan, on his 60th birthday, to-day, as "a great scientist, a great scholar and a man with the least lopsided personality".

Mr. Nehru was speaking at a function held at the National Physical Laboratory, this evening, to celebrate the occasion.

The Prime Minister said that, apart from being a scientist of repute, Dr. Krishnan was a man endowed with rich human qualities and it were these human qualities that made him more valuable to society. Continuing, he said that one could feel young and active all one's life by developing a sense of fun—"not in the trivial sense of the term but a deeper sense", and the reason why Dr. Krishnan continued to be youthful and active, in his opinion, was that he had a lot of fun and good humour in him. "Every time Dr. Krishnan meets me, he has an interesting story to tell," he added.

Earlier, Mr. Lal Bahadur Shastri, Union Minister for Commerce and Industry, who presided over the function, said that Dr. Krishnan ranked among the few Indian scientists who had attained international repute and thereby brought honour and glory to the country.

Others who praised Dr. Krishnan's services to the nation in general and science in particular, included the distinguished scientists, Dr. C. H. Bhaba and Professor M. S. Thacker.

The staff of the National Physical Laboratory presented to Dr. Krishnan a silver plate with a replica of the Institute inscribed on it, which he donated to the Institute "for starting a fund for the welfare of the members of the staff".

"The Hindu" 9 10 12/58

# டாக்டர் கிருஷ்ணன் ஷஷ்டி அப்த பூர்த்தி



டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் உலகத்தின் தலைசிறந்த பௌதிக சாஸ்திரிகளில் ஒருவர். நமது பாரத நாட்டின் தேசீய பௌதிக சாலையின் டைரக்டர். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளிநாடுகளிலுள்ள பௌதிக ஆராய்ச்சி சங்கங்களால் கௌரவிக்கப்பட்டவர்.

இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த இப்பெரியாருக்கு மற்றொரு தனிச் சிறப்பும் உண்டு. இவர் தமிழர். தமிழ்ப்பற்று மிக்கவர். நீண்ட நாட்களாகத் தமிழ்ப் பணியாற்றி வருகிறார். திருவாய்மொழி இவருக்கு உயிர். இவருக்கு பௌதிக சாஸ்திரம் ஒரு கண், திருவாய்மொழி மற்றொரு கண்.

இத்தகைய விஞ்ஞான மேதையின் தமிழ்ப் பெரியாருக்கு இந்த டிசம்பர் மாதம் அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதையொட்டி தில்லியில் பெரியதொரு விழா டிசம்பர் 14ந்தேதி நடக்கவிருக்கிறது. இப்பெரியாருக்கு நீண்ட ஆயுளையும் திடகாத்திர வாழ்வையும் அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



விஞ்ஞானப் பேரறிஞர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனின் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா அவரது இல்லத்தில் சாஸ்திரோக்தமாக டிசம்பர் மூன்றாந் தேதி யன்று நடந்தேறிய போது எடுத்த படம்.

# டாக்டர் கே எஸ். கிருஷ்ணன்

ராமனும் கிருஷ்ணனும் பாரதத்தின் பண்டையப் பெருமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் பெயர்கள்.

இன்று விஞ்ஞானத் துறையிலும் பாரதத்தின் பெருமை ஓங்கி நிற்பது ராமனுலும், கிருஷ்ணனுலும்தான்.

விஞ்ஞான மேதை சர் சி. வி. ராமன் பௌதிகத் துறையில் ஒரு மாபெரும் ஆராய்ச்சியைச் செய்து, அரியதோர் உண்மையை வெளிப்படுத்தினுர். அந்த ஆராய்ச்சியைக் கண்டு உலகம் பிரமித்தது. ஒரு கறுப்பு மனிதரா இதைக் கண்டு பிடித்தார் என்று வியந்தது. பிறகு அவரது ஒளியில் உணர்வு பெற்று, உலகில் சிறந்த நோபல் பரிசையும் அவருக்கு அளித்தது. அந்த மாபெரும் ஆராய்ச்சியில் ராமனுக்கு உறு துணையாக நின்று உதவியவர் டாக்டர் கிருஷ்ணன்.



டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் பௌதிகத் துறையில் ஓர் பெரிய மேதை. நமது நாட்டின் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கெல்லாம் கேந்திரமாக இன்று விளங்கும் தேசிய பௌதிக ஆராய்ச்சி சாலையின் தலைவராக டில்லியில் பணியாற்றி வருகிருர். நாட்டிற்காக எண்ணற்ற இளம் விஞ்ஞான நிபுணர்களை உண்டாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிருர்.

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் பெற்றுள்ள மேல்நாட்டு விருதுகளையும், கௌரவப் பட்டங்களையும் பார்த்தாலே அவர் உலகில் எவ்வளவு பெரிய ஸ்தானத்தை வகிக்கிருர் என்பது புலனுகும்.

1946 லேயே அவருக்குப் பிரிட்டிஷ் சர்க்காரால் 'சர்' பட்டம் அளிக்கப்பட்டது. பிரிட்டனிலுள்ள பல சர்வகலாசாலைகளும், நம் நாட்டு சர்வ கலாசாலைகளும் அவருக்கு ஏராளமான கௌரவப் பட்டங்களை வழங்கியுள்ளன.

இதைத் தவிர அவர் கௌரவ அங்கத்தினராக இல்லாத விஞ்ஞான ஸ்தாபனங்களே உலகில் இல்லை எனலாம்.

இவ்வளவு தூரம் விஞ்ஞானத் துறையில் ஈடுபட்டிருந்தும், டாக்டர் கிருஷ்ணன், இன்றும் குழந்தை உள்ளத்துடன் இருந்து வருகிருர். இலக்கியத்திலும், கவிதையிலும், பாட்டிலும், பாசுரங்களிலும் உள்ளத்தைப் பறி கொடுக்கிருர். தாய் மொழியில் அளவிலாப் பற்று, நிறைந்த தெய்வ பக்தி இவைகளுடன் அந்த நிறை குடம் விளங்குகின்றது.

தமிழ்ப் பண்பும், தமிழ்க் கலையும் அவர் உள்ளத்திலும் உடலிலும் அவ்வளவு தூரம் ஊறி இருக்கிறது.

டாக்டர் கிருஷ்ணன் அவர்களுடைய சாதனைகளைப் பார்த்தால், அவருக்கு வயது அறுபதுதான் ஆகிறது என்று யாரும் நம்பவே மாட்டார்கள்.

இலக்கியத்தில் அவருக்கு உள்ள துடிப்பையும் அக்கறையையும்கண்டவர்கள், அவருக்கு அறுபது வயதாகி விட்டது என்றுல் நம்ப மாட்டார்கள்.

இந்த மாதம் 3ந் தேதி அவருக்கு 60–வது பிறந்த தினம், வைதீக முறையில் டில்லியில் அவர் இல்லத்தில் கொண்டாடப் பட்டது.

தமிழ் நாட்டிற்கும் பாரதத்துக்கும் தனிப் பெருமையைத் தேடித் தந்துள்ள இந்தத் தமிழ் மகனைக் கௌரவிக்க வேண்டுமென்று டில்லி தமிழ்ச் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

அதற்காக இந்த மாதம் 14ந் தேதியன்று, அவர் 60–வது பிறந்த தின விழாவை ஒரு பொது விழாவாக, மிகச் சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது.

டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் நீடூழி வாழ்ந்து, நம் பாரத நாட்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்க, எல்லாம் வல்ல இறைவனைப் பாரத மக்கள் எல்லோரும் பிரார்த்திக்கிருர்கள்.



Vikatan 14.12.58

மித்திரன்

# ஞாயிறு மலர்

6.12.58

தமிழகம் மட்டுமன்றி அகில இந்தியாவுமே பெருமைப்படக் கூடிய தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவர், தேசிய பௌதிக ஆராய்ச்சிக்கூடத்தின் டைரக்டரான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன். பௌதிகத்துறையில் உலக நாடுகளிடையே பாரதத்துக்கு உயர்கௌரவம் தேடித் தந்திருப்பவர் அவர். அத்துறையில் அவர் ஆற்றியுள்ள அரும் பணிகள் பலப் பல—ஸர் ஸி. வி. ராமனுக்கு நோபெல் பரிசு பெற்றுத் தந்தது, 'ராமன் விளைவு' என்னும் ஒளிக் கதிரியல் கண்டுபிடிப்பு; அதற்கான ஆராய்ச்சியில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பங்கு உண்டு என்பது ஒன்றே போதும், அவர் திறமைக்குச் சான்ருக.

பௌதிகத்தில் மாத்திரமல்ல, இதர விஞ்ஞானப் பிரிவுகளிலும் அவருக்கு ஆற்றல் உண்டு, ஆர்வம் உண்டு. இன்று நாடெங்கும் நிறுவப்பட்டுள்ள பல்வேறு ஆராய்ச்சிச்சாலைகளுக்கு வித்திட்டவர் அவரேயென்ருல் மிகையில்லை. கல்கத்தா போன்ற பல சர்வகலாசாலைகள் விஞ்ஞானத்துறையில் முன்னேறியிருப்பதற்கும், அவற்றுடன் அவர் தொடர்பு கொண்டிருந்ததே பெரிதும் காரணமெனலாம்.

விஞ்ஞானம் போலவே தமிழினிடமும் மிகுந்த ஈடுபாடு உடையவர் அவர். வத்திராயிருப்பில் பிறந்து, ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சங்கம் கண்ட மதுரையிலும் படித்துப் பட்டம் பெற்றவரல்லவா, தமிழ்ப்பற்று இல்லாது போகுமா? டில்லி தமிழ்ச் சங்கத்தை நிறுவிய அவர், பல தமிழ் நூல்களில் தேர்ந்தவர்; விசேஷமாக திருவாய்மொழியில் தோய்ந்தவர். தெய்வ பக்தி நிரம்பியவர். அடக்கமே அவதாரம். பண்பே உருவானவர்—இவ்விதம் மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் பரிணமிக்கும் இப்பெரியாருக்கு இவ்வாரம் அறுபதாண்டு நிறைவு. நாடெங்கும் பாராட்டுக் கூட்டங்கள் நடக்கின்றன; உலக விஞ்ஞானிகள் வாழ்த்துகின்றனர், வணங்குகின்றனர். அவர்களுடன் நாமும் பல்லாண்டு கூறுகிறோம்.



டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்)

வாசகர்கள் விவாத அரங்கு:

# சரி நிகர் சமானம்

(ரைனே சூலியமோவா)

என் பாட்டி எதற்கும் அடங்கி ஒடுங்கி நடக்கும் சுபாவமுள்ளவள். கணவனைக் கண்டதும் தலை குனிந்து வணக்கம் செய்வாள். கணநேரங்கூட முகத் திரையை அகற்ற மாட்டாள். ஆனால், என் தாய் திரையையும் பர்தாவையும் கைவிட்டு பல காலமாகி விட்டது. என்றாலும் வயதான பிறகே என் தாய் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டாள்.

ஆனால் என் காலத்திற்குள் வாழ்க்கையே அடியோடு மாறி விட்டது. எட்டு வயதானதும் யாரும் என் முகத்தைத் திரையிட்டு மூட வேண்டுமென்று கூறவில்லை. என் தாயே என்னை பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று படிக்கச் சொன்னாள். பிறகு நான் உயர்தரப் பள்ளியிலே சேர்ந்து தொடர்ந்து படிப்பதென்று முடிவு செய்தபோது வீட்டில் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. படிப்பு முடிந்து நான் வேலையில் அமர்ந்தபோதுங்கூட எல்லோரும் மகிழ்ச்சியே தெரிவித்தனர். தாஜிக் குடியரசின் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்திலே நான் விஞ்ஞான ஊழியராக வேலை செய்ய முற்பட்டேன்.

ஆனால் ஒரு நாள் வழக்கத்துக்கு விரோதமாக நான் கொஞ்சம் நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பியபோது என் தாயின் பேச்சுக் குரல் கேட்டது.

“கவலைப்பட வேண்டாம்! ரைனேவுக்கு மணமாகட்டும், பிறகு அவள் இந்தக் கழக வேலையைத் துறந்து விடுவாள். புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளை மறந்து விட்டு வீட்டிலே தங்கி குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விடுவாள்” என்று என் தாய் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனால் இதற்காக நான் என் தாயைப்பற்றி குறைபட்டுக் கொள்ளவில்லை. பல நூறு ஆண்டுகளாக ஆதிக்கத்தில் இருந்த தப்பெண்ணங்களை நினைத்த மாத்திரத்தில் அகற்றிவிட முடியாது. புதிய காலத்தின் புதிய நிலைமைகளுக்கேற்ப என் தாய் என்னைக் கல்லூரியிலே படிக்க அனுமதித்து விட்டாள். இருந்தாலும் பல சந்தேகங்களும் அவளை வாட்டி வந்தன. முன்னோர்களின் பழக்க வழக்கங்களை மீறி நடந்து மகளுக்கு குடும்ப வாழ்க்கையின் இன்பம் கிடைக்காதபடி தடுத்து விடுகிறோமோ என்ற அச்சம் அவளை வருத்தியது.

எங்கள் கழகத்தில் முக்கியமான புதைபொருள் ஆராய்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்கள். எதிர்பாராத வகையில் என்னையே இதற்குத் தலைமை தாங்கும்படிக் கூறி விட்டனர். மகிழ்ச்சியால் தலைகால் புரியாமல் நான் நேரே வீட்டிற்கு ஓடி வந்து என் பெற்றோர்களிடம் இந்த நற்செய்தியைத் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் இதைக் கேட்டு சந்தோஷப்படவில்லை. என் தந்தை முணுமுணுத்துக் கொண்டார். என் தாய் அழத் தொடங்கி விட்டாள். இந்த ஆராய்ச்சி வேலையை எப்படியும் நான் கைவிட்டாக வேண்டுமென்று கூறி கண்ணீர் வடித்தாள்.

“உனக்கும் எங்களுக்கும் கெட்ட பெயர்தான் கிடைக்கும்” என்றாள். “பெண்ணாகப் பிறந்தவள் வீட்டை விட்டு தனியே சென்று ஸ்டெப்பி வெளிகளிலே ஆண்களோடு சேர்ந்து வேலை செய்வது அவக் கேடானது.”

பேசிப் பயனில்லை என்பதைக் கண்டேன். இருந்தாலும் நான் என் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. புதிய தலைமுறையைச் சேர்ந்தவள், எப்படி நான் இன்றைய வாழ்க்கையின் எல்லையற்ற வாய்ப்புகளை உதறி எறிந்து விட்டு வீட்டிலே அடைபட்டு அடுப்பங்கரை வாழ்க்கையின் “இன்பத்தை” ஏற்க முடியும்? கோழையைப் போல் என் இலட்சியப் பாதையை விட்டு விலக நான் விரும்பவில்லை.

பெற்றோரின் அனுமதியின்றியே ஆராய்ச்சியாளரின் குழுவுடன் புறப்பட்டுச் சென்று விட்டேன். “என் தாயும் தந்தையும் நல்லவர்கள், இறுதியில் கோபம் தணிந்து என்னைப் புரிந்து கொள்வார்கள்” என்று கூறி என் மனதைத் தேற்றிக் கொண்டேன். “மூத்த தலைமுறையினர் இளந் தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டும் என்றாலுங்கூட, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இடையூறு செய்யும் முட்டுக் கட்டையாக இருக்கக் கூடாதென்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.”

பெற்றோரின் அனுமதியின்றி போவதற்கு எனக்கு சங்கடமாய்த்தான் இருந்தது. ஆனால் ஆராய்ச்சி இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் நான் மற்றவை யாவற்றையும் மறந்து வேலைகளிலே மூழ்கி விட்டேன். ஒரு மாதத்திற்குள் நாங்கள் அங்கே புதைந்திருந்த ஒரு பெரிய அரண்மனையைக் கண்டு பிடித்து விட்டோம். அதன் கூடங்களில் நேர்த்தியான சுவர்ச் சித்திரங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் அலங்காரங்களும் காணப்பட்டன. சித்திரங்களின் எழில் வண்ணங்களும் அற்புதமான கண்ணாடிப் பாத்திரங்களும் எங்களை மெய் சிலிர்க்கச் செய்தன.

புதைந்து கிடந்த கட்டிடங்களை ஆராய்ந்தோம். கவியரசர் ரூத்கியும் அறிஞர் அவிசின்னாவும் வாழ்ந்த காலத்தில் இருந்த பண்டைய குல்புக் நகரின் மிச்ச சொச்சங்களே இந்தக் கட்டிடங்கள் என்பது தெளிவாகியது. தினசரி நாங்கள் புதிய பல அரிய விவரங்களைக் கண்டு பிடித்தோம். எழில் வாய்ந்த இந்தப் பழம்பெரும் நகர் அக்காலத்தில் எப்படித் தோன்றியிருக்கும் என்பதை நான் தெளிவாக என் மனக் கண்முன்னே காண முடிந்தது.

நானும் என் தோழர்களும் கண்ட இந்த வெற்றியின் சிறப்பை எப்படி என் பெற்றோருக்கு உணர்த்துவது? பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையே நிற்கும் இந்த “பெருஞ் சுவற்றைத்” தகர்ப்பது எப்படி? இதை எண்ணி என் மனம் வேதனையடைந்தது. இருந்தாலும் இது ஒரு தீராத பிரச்னையல்ல என்பது சில காலத்திற்கெல்லாம் தெரிந்து விட்டது. ஆரம்பத்தில் என் பெற்றோர்களிடமிருந்து வந்த கடிதங்கள் மிகவும் சுருக்கமாகவும் சுவையின்றியும் இருந்தன. நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் என்னைப்பற்றியும் என் வேலைகளைப்பற்றியும் அதிகமாக விசாரிக்கத் தொடங்கினர். கடைசியில் வந்த கடிதம் ஒன்றில் என் தாய் பின்வருமாறு எழுதியிருந்தாள்: “அருமை மகளே! அங்கே ஸ்டெப்பி வெளிகளில் நீங்கள் செய்துவரும் அரிய வேலையைப்பற்றி இன்று பத்திரிகையிலே படித்தோம். உன் முடிவே சரியான முடிவு. உனக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதற்கேற்ப நீ உன் வாழ்க்கையை வகுத்துக்கொள்.”

## இந்திய வழக்கறிஞர் தூதுகோஷ்டிக்கு குருஷேவ் வரவேற்பு உபசாரம்

இந்திய சட்ட மந்திரி அசோக் குமார் சென் தலைமையில் சோவியத் யூனியன் வந்திருந்த இந்திய வழக்கறிஞர் தூதுகோஷ்டியை சோவியத் பிரதமர் நிகிதா குருஷேவ் வரவேற்று உபசரித்தார். சோவியத் யூனியன் சுப்ரீம் கோர்ட்டின் அழைப்பின்பேரில் இந்த தூதுகோஷ்டி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்திருக்கிறது.

நிகிதா குருஷேவும் தூதுகோஷ்டி உறுப்பினர்களும் நேசப்பான்மையுடன் நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

சோவியத் யூனியனிலுள்ள இந்திய ஸ்தானிகாலய பிரதம அதிகாரி அஹூஜா, சோவியத் சுப்ரீம் கோர்ட்டின் தலைவர் அலெக்சாந்தர் கோர்க்கின், சோவியத் யூனியனின் புரகுரேட்டர் ஜெனரல் ரோமன் ருதெங்கோ, இந்தியாவிலுள்ள சோவியத் ஸ்தானிகர் பந்தலீமன் பனமரெங்கோ, சோவியத் சுப்ரீம் கோர்ட்டின் உப தலைவர் லெவ் சிமிர்னேவ் ஆகியோர் உரையாடலின் போது பிரசன்னமாயிருந்தார்கள்.

வாசகர்கள் விவாத அரங்கு:

# சரி நிகர் சமானம்

ரைனோ சூலியமோவா

என் பாட்டி எதற்கும் அடங்கி ஒடுங்கி நடக்கும் சுபாவமுள்ளவள். கணவனைக் கண்டதும் தலை குனிந்து வணக்கம் செய்வாள். கணநேரங்கூட முகத் திரையை அகற்ற மாட்டாள். ஆனால், என் தாய் திரையையும் பர்தாவையும் கைவிட்டு பல காலமாகி விட்டது. என்றாலும் வயதான பிறகே என் தாய் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டாள்.

ஆனால் என் காலத்திற்குள் வாழ்க்கையே அடியோடு மாறி விட்டது. எட்டு வயதானதும் யாரும் என் முகத்தைத் திரையிட்டு மூட வேண்டுமென்று கூறவில்லை. என் தாயே என்னை பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று படிக்கச் சொன்னாள். பிறகு நான் உயர்தரப் பள்ளியிலே சேர்ந்து தொடர்ந்து படிப்பதென்று முடிவு செய்தபோது வீட்டில் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. படிப்பு முடிந்து நான் வேலையில் அமர்ந்தபோதுங்கூட எல்லோரும் மகிழ்ச்சியே தெரிவித்தனர். தாஜிக் குடியரசின் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்திலே நான் விஞ்ஞான ஊழியராக வேலை செய்ய முற்பட்டேன்.

ஆனால் ஒரு நாள் வழக்கத்துக்கு விரோதமாக நான் கொஞ்சம் நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பியபோது என் தாயின் பேச்சுக் குரல் கேட்டது.

‘‘ கவலைப்பட வேண்டாம் ! ரைனோவுக்கு மணமாகட்டும், பிறகு அவள் இந்தக் கழக வேலையைத் துறந்து விடுவாள். புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளை மறந்து விட்டு வீட்டிலே தங்கி குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விடுவாள் ’’ என்று என் தாய் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனால் இதற்காக நான் என் தாயைப்பற்றி குறைபட்டுக் கொள்ளவில்லை. பல நூறு ஆண்டுகளாக ஆதிக்கத்தில் இருந்த தப்பெண்ணங்களை நினைத்த மாத்திரத்தில் அகற்றிவிட முடியாது. புதிய காலத்தின் புதிய நிலைமைகளுக்கேற்ப என் தாய் என்னைக் கல்லூரியிலே படிக்க அனுமதித்து விட்டாள். இருந்தாலும் பல சந்தேகங்களும் அவளை வாட்டி வந்தன. முன்னோர்களின் பழக்க வழக்கங்களை மீறி நடந்து மகளுக்கு குடும்ப வாழ்க்கையின் இன்பம் கிடைக்காதபடி தடுத்து விடுகிறோமோ என்ற அச்சம் அவளை வருத்தியது.

எங்கள் கழகத்தில் முக்கியமான புதைபொருள் ஆராய்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்கள். எதிர்பாராத வகையில் என்னையே இதற்குத் தலைமை தாங்கும்படிக் கூறி விட்டனர். மகிழ்ச்சியால் தலைகால் புரியாமல் நான் நேரே வீட்டிற்கு ஓடி வந்து என் பெற்றோர்களிடம் இந்த நற்செய்தியைத் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் இதைக் கேட்டு சந்தோஷப்படவில்லை. என் தந்தை முணுமுணுத்துக் கொண்டார். என் தாய் அழத் தொடங்கி விட்டாள். இந்த ஆராய்ச்சி வேலையை எப்படியும் நான் கைவிட்டாக வேண்டுமென்று கூறி கண்ணீர் வடித்தாள்.

‘‘ உனக்கும் எங்களுக்கும் கெட்ட பெயர் தான் கிடைக்கும் ’’ என்றாள். ‘‘ பெண்ணாகப் பிறந்தவள் வீட்டை விட்டு தனியே சென்று ஸ்டெப்பி வெளிகளிலே ஆண்களோடு சேர்ந்து வேலை செய்வது அவக் கேடானது.’’

பேசிப் பயனில்லை என்பதைக் கண்டேன். இருந்தாலும் நான் என் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. புதிய தலைமுறையைச் சேர்ந்தவள், எப்படி நான் இன்றைய வாழ்க்கையின் எல்லையற்ற வாய்ப்புகளை உதறி எறிந்து விட்டு வீட்டிலே அடைபட்டு அடுப்பங்கரை வாழ்க்கையின் ‘‘ இன்பத்தை ’’ ஏற்க முடியும் ? கோழையைப் போல் என் இலட்சியப் பாதையை விட்டு விலக நான் விரும்பவில்லை.

பெற்றோரின் அனுமதியின்றியே ஆராய்ச்சியாளரின் குழுவுடன் புறப்பட்டுச் சென்று விட்டேன். ‘‘என் தாயும் தந்தையும் நல்லவர்கள், இறுதியில் கோபம் தணிந்து என்னைப் புரிந்து கொள்வார்கள் ’’ என்று கூறி என் மனதைத் தேற்றிக் கொண்டேன். ‘‘ மூத்த தலைமுறையினர் இளந் தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டும் என்றாலுங்கூட, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இடையூறு செய்யும் முட்டுக் கட்டையாக இருக்கக் கூடாதென்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.’’

பெற்றோரின் அனுமதியின்றி போவதற்கு எனக்கு சங்கடமாய்த்தான் இருந்தது. ஆனால் ஆராய்ச்சி இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் நான் மற்றவை யாவற்றையும் மறந்து வேலைகளிலே மூழ்கி விட்டேன். ஒரு மாதத்திற்குள் நாங்கள் அங்கே புதைந்திருந்த ஒரு பெரிய அரண்மனையைக் கண்டு பிடித்து விட்டோம். அதன் கூடங்களில் நேர்த்தியான சுவர்ச் சித்திரங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் அலங்காரங்களும் காணப்பட்டன. சித்திரங்களின் எழில் வண்ணங்களும் அற்புதமான கண்ணாடிப் பாத்திரங்களும் எங்களை மெய் சிலிர்க்கச் செய்தன.

புதைந்து கிடந்த கட்டிடங்களை ஆராய்ந்தோம். கவியரசர் ரூத்கியும் அறிஞர் அவிசின்னாவும் வாழ்ந்த காலத்தில் இருந்த பண்டைய குல்புக் நகரின் மிச்ச சொச்சங்களே இந்தக் கட்டிடங்கள் என்பது தெளிவாகியது. தினசரி நாங்கள் புதிய பல அரிய விவரங்களைக் கண்டு பிடித்தோம். எழில் வாய்ந்த இந்தப் பழம்பெரும் நகர் அக்காலத்தில் எப்படித் தோன்றியிருக்கும் என்பதை நான் தெளிவாக என் மனக் கண்முன்னே காண முடிந்தது.

நானும் என் தோழர்களும் கண்ட இந்த வெற்றியின் சிறப்பை எப்படி என் பெற்றோருக்கு உணர்த்துவது ? பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையே நிற்கும் இந்த ‘‘பெருஞ் சுவற்றைத்’’ தகர்ப்பது எப்படி? இதை எண்ணி என் மனம் வேதனையடைந்தது. இருந்தாலும் இது ஒரு தீராத பிரச்னையல்ல என்பது சில காலத்திற்கெல்லாம் தெரிந்து விட்டது. ஆரம்பத்தில் என் பெற்றோர்களிடமிருந்து வந்த கடிதங்கள் மிகவும் சுருக்கமாகவும் சுவையின்றியும் இருந்தன. நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் என்னைப்பற்றியும் என் வேலைகளைப்பற்றியும் அதிகமாக விசாரிக்கத் தொடங்கினர். கடைசியில் வந்த கடிதம் ஒன்றில் என் தாய் பின்வருமாறு எழுதியிருந்தாள் : ‘‘ அருமை மகளே ! அங்கே ஸ்டெப்பி வெளிகளில் நீங்கள் செய்துவரும் அரிய வேலையைப்பற்றி இன்று பத்திரிகையிலே படித்தோம். உன் முடிவே சரியான முடிவு. உனக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதற்கேற்ப நீ உன் வாழ்க்கையை வகுத்துக்கொள்.’’

## இந்திய வழக்கறிஞர் தூதுகோஷ்டிக்கு குருஷேவ் வரவேற்பு உபச்சாரம்

இந்திய சட்ட மந்திரி அசோக் குமார் சென் தலைமையில் சோவியத் யூனியன் வந்திருந்த இந்திய வழக்கறிஞர் தூதுகோஷ்டியை சோவியத் பிரதமர் நிகிதா குருஷேவ் வரவேற்று உபசரித்தார். சோவியத் யூனியன் சுப்ரீம் கோர்ட்டின் அழைப்பின்பேரில் இந்த தூதுகோஷ்டி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்திருக்கிறது.

நிகிதா குருஷேவும் தூதுகோஷ்டி உறுப்பினர்களும் நேசப்பான்மையுடன் நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

சோவியத் யூனியனிலுள்ள இந்திய ஸ்தானிகாலய பிரதம அதிகாரி அஹூஜா, சோவியத் சுப்ரீம் கோர்ட்டின் தலைவர் அலெக்சாந்தர் கோர்க்கின், சோவியத் யூனியனின் புரகுரேட்டர் ஜெனரல் ரோமன் ருதெங்கோ, இந்தியாவிலுள்ள சோவியத் ஸ்தானிகர் பந்தலீமன் பனமரெங்கோ, சோவியத் சுப்ரீம் கோர்ட்டின் உப தலைவர் லெவ் சிமிர்னோவ் ஆகியோர் உரையாடலின் போது பிரசன்னமாயிருந்தார்கள்.

